கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்குப் பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

(இ) உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டியும் சிலரும் கைது குறித்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பேசுவதற்கு முன் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திருவண்ணாமலை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"I have the honour to inform that I have found it my duty in the exercise of my power u/s 147, 148, 294, 188, 336 and 506 IPC to direct that Thiru K. Pitchandi, M.L.A., Tiruvannamalai Assembly Constituency and 61others formed themselves into an unlawful assembly with deadly weapons, pelted stones on six Government Transport buses in between Krishna Lodge and Gandhi Statue on Big Street, Tiruvannamalai Town on 10-4-2003 between 00.30 hrs. and 1-30. hrs. and damaged the wind screen glasses to the tune of Rs.15,000 protesting against the arrest of Thiru M.K. Stalin, M.L.A., and others on 9-4-2003 night at Chennai. They were taken into custody today (10-4-2003) at 3-30 hrs. vide Tiruvannamalai Town Police Crime No.475/2003 and are being sent for remand. This is for favour of kind information".

@ 129 முதல் 254 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.